**07.10.2025 அசல் வழக்கு எண். 63/2018 Starting Time : 04.30 p.m.**

**வா.சா.1 திரு. செல்லப்பா த/பெ. பார்கவநாதன்.**

**சாட்சியை சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

**1**. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எஸ்ஸி., படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வந்தேன் என்றால் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் Legal cum Inspecting Officer ஆக பணிபுரிந்து வந்தேன். எந்தெந்த மாவட்டத்தில் பணிபுரிந்து வந்தேன் என்றால் விழுப்புரம், காஞ்சிபுரம், சேலம் ஆகிய மாவட்டங்களில் பணிபுரிந்து வந்தேன்.

**2**. பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது அனுபவத்தை இடையூறு செய்யக் கூடாது என்றும், தவறான ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளதை செல்லாது என்றும், நீதிமன்றம் மூலம் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.103/6டி ஆகும். அதன் விஸ்தீரணம் சுமார் 10 சென்ட் ஆகும். தாவா சொத்து விவரத்தின் ஜக்பந்தி கூற முடியுமா என்றால் முடியும். லோகபால நயினார் நிலத்திற்கு வடக்கு, என்னுடைய கிரய மனைக்கு தெற்கு, அரசு புறம்போக்கிற்கு கிழக்கு, அரசு புறம்போக்கிற்கு மேற்கு ஆகும்.

**3**. மேற்சொன்ன ஜக்பந்தியில் என்னுடைய கிரய மனை என்று குறிப்பிட்டுள்ளது நான் கிரயம் பெற்ற இடமா என்றால் எனது அப்பா கிரயம் பெற்ற இடமாகும். எனது அப்பா கிரயம் பெற்ற சர்வே எண்கள்.103/6எ, 103/6பி, 103/6சி, 103/6டி ஆகிய இடங்களுக்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. பட்டா எண்ணை கூற முடியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**4**. இந்த வழக்கை நான் மட்டும் தாக்கல் செய்துள்ளேனா அல்லது எனது குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனது குடும்ப உறுப்பினர்களின் ஒப்புதலின்பேரில் வழக்கை நான் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை நடத்துவதற்கு எனது குடும்ப உறுப்பினர்கள் எனக்கு ஏதேனும் பொது அதிகாரம் கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் என்னுடன் சேர்த்து நான்கு பேர் ஆவோம். நான், எனது தம்பி குமார் மற்றும் எனது சகோதரிகள் வசந்தலட்சுமி மற்றும் அமுதலட்சுமி ஆவார்கள்.

**5**. நான் விழுப்புரத்தில் இருக்கிறேன் என்றால் சரிதான். எனது தம்பி குமார் எங்கு வசித்து வருகிறார் என்றால் இராணிப்பேட்டையில் வசித்து வருகிறார். வசந்தலட்சுமி எங்கு வசித்து வருகிறார் என்றால் காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறார். அமுதலட்சுமி எங்கு வசித்து வருகிறார் என்றால் பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார். தாவாவை நான் குடும்ப மேலாளர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ள பட்சத்தில், அந்த அதிகாரத்தை எனக்கு யார் கொடுத்தார்கள் என்றால் எனது சகோதர, சகோதரிகள் கொடுத்தார்கள். எழுத்துப் பூர்வமாக கொடுத்தார்களா என்றால் இல்லை, வாய்மொழியாக கூறினார்கள்.

**6**. நானும் எனது சகோதர, சகோதரிகளும் திருமணமான பின்னிட்டு தனித்தனியே வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் 40 ஆண்டுகள் இருக்கும். அனைவரும் தனித்தனி குடும்பமாக, சமையல் செய்து தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றும், அவரவர் குடும்பத்திற்கு அவரவர் தான் கர்த்தா என்றால் சரிதான். எனது தகப்பனார் எந்த ஆண்டு தாவா சொத்துக்களை கிரயம் பெற்றார் என்றால் 1956ஆம் ஆண்டு கிரயம் பெற்றார். யாரிடம் கிரயம் பெற்றார் என்றால் பார்சுவநாத நயினார், அருகதாஸ் நயினார், ஞானசாகர நயினார், துரைசாமி நயினார், சொர்ணபத்தர நயினார் ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றார்.

**7**. எனது அப்பா கிரயம் பெற்றவுடனே பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. எந்த வருடத்தில் இருந்து நான் விழுப்புரத்தில்

குடியிருந்து வருகிறேன் என்றால் 1973ல் இருந்து குடியிருந்து வருகிறேன். தாவா கிராமத்திற்கு நான் எப்போது வருவேன் என்றால் வாராவாரம் வந்து எனது பெற்றோரை பார்த்து விட்டு செல்வேன். தாவா சொத்துக்கள் நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்றால் புஞ்சை நிலம். அந்த நிலத்தில் பயிா் ஏதும் வைத்து வருகிறேனா என்றால் பயிா் வைக்கவில்லை, எனது அப்பா ரைஸ் மில் கட்டி இருந்தாா். ரைஸ் மில்லுக்கு உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**8**. எனது தகப்பனாா் எந்த வருடம் காலமானாா் என்றால் 05.09.2013ல் காலமானாா். எனது தகப்பனாா் இறக்குவரையில் நன்றாக தான் இருந்தாா் என்றால் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு படுத்த படுக்கையாக இருந்தாா். அதற்கு முன்பு சுய நினைவோடு இருந்தாரா என்றால் இருந்தாா். தாவா சொத்தை லோகபால நயினாா் ரவிச்சந்திரன் என்பவருக்கு எந்த வருடம் விற்றாா் என்றால் 2006ஆம் ஆண்டு விற்றாா். 2006ஆம் ஆண்டு பத்திரத்தில் எந்தெந்த சொத்துக்களை விற்றாா்கள் என்றால், சா்வே எண். 103/6டி-ல் உள்ள எங்களது நிலத்தையும், தெற்கு பக்கம் உள்ள லோகபால நயினாரின் நிலத்தையும் சோ்த்து விற்றுவிட்டாா்.

**9**. சா்வே எண்கள்.103/6எ, 103/6பி, 103/6சி, 103/6டி ஆகியவை நஞ்சை வகையை சோ்ந்ததா, புஞ்சை வகையை சோ்ந்ததா அல்லது நத்தம் நிலம் வகையை சோ்ந்ததா என்றால் நான்கு சா்வே எண்களும் புஞ்சை நிலம் வகையை சோ்ந்ததாக இருந்தது, அதில் 103/6சி-ல் ரைஸ் மில் கட்டியதால் அரசாங்கம் அதை நத்தம் வகையில் சோ்த்துவிட்டது. 2006ல் கிரயம் செய்தது எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2018ல் தெரிய வந்தது. 2018ல் தெரிந்திருந்தால் அதற்கு பிறகு தான் பத்திரம் போட்டு பாா்க்க முடியும் என்றும், அதற்கு முன்பு பத்திரம் போட்டு பாா்க்க முடியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.3 மற்றும் வா.த.சா.ஆ.4** ஆவணங்களில் 03.03.2017 என்றும், 05.03.2018 என்றும் உள்ளது என்றால் சரிதான்.

**10**. மோசடியான கிரய ஆவணம் ஏற்படுத்தியது குறித்து எனது சகோதரரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். 2018ஆம் வருடம் பொங்கல்

பண்டிகையின்போது பேசிக்கொண்டிருக்கும்போது தெரிவித்தேன். எனது சகோதரர் வழக்கறிஞராக உள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரர் வழக்கறிஞராக உள்ள பட்சத்தில், சொத்துக்களை பொறுத்து நானும் எனது சகோதர சகோதரிகளும் சேர்ந்து தான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்ற விவரம் தெரிந்தும் ஏன் அவ்வாறு செய்யவில்லை என்றால் அவரின் ஒப்புதலின்பேரில் தான் நான் மட்டும் வழக்கு தாக்கல் செய்தேன். எனது சகோதரர் உடன் கருத்து வேறுபாடு உள்ளதால் அவருக்கு தெரியாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**11**. காலமான எனது தந்தையின் வாரிசுகளான நாங்கள் நான்கு பேரும் சேர்ந்து தான் விளம்புகை பரிகாரம் கேட்க முடியும் என்றும், நான் மட்டும் தனியாக விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2011 வரை தாவா கிராமத்தில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். 2006ல் கிரயம் செய்த விவரம் எனது தகப்பனாருக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களை தவிர மீதம் உள்ள சொத்துக்களை நாங்கள் நேரடியாக அனுபவித்து வருகிறோமா என்றால் வாரம் ஒரு முறை சென்று பார்த்து வருவோம்.

**12**. பார்சுவநாதன் என்ற பெயர் குழப்பத்தில் தான் அ பதிவேட்டில் சொத்துக்கள் 4ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயருக்கு மாறிவிட்டதா என்றால் சரிதான். லோகபால நயினாரின் தகப்பனார் பெயர் பார்சுவநாதன் என்றால் சரிதான். அவரின் அப்பா பெயர் என்ன என்றால் தெரியாது. அ பதிவேட்டில் பெயர் குழப்பம் ஏற்பட்டது குறித்து அதற்கான அதிகாரிகளிடம் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பெயர் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக நான் கூறியுள்ள பட்சத்தில், எவ்வளவு நாட்களாக பட்டாவில் 4ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் உள்ளது என்றால் தற்போது வரை உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாவது பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 4ஆம் பிரதிவாதியிடம் பட்டாவில் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை. 4ஆம் பிரதிவாதியிடம் பத்திரத்தை பற்றி

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினேன். ஆனால் பட்டாவில் பெயர் மாற்றம் குறித்து பேசவில்லை.

**13**. தாவா சொத்தில் யார் யார் அத்துமீறி நுழைந்தார்கள் என்றால் 2ஆம் பிரதிவாதி ரவிச்சந்திரன் மற்றும் அவருடைய ஆட்கள் தாவா சொத்தில் உள்ள வேலி மரங்களை வெட்ட ஆரம்பித்தார்கள், அப்போது அதை கேள்விப்பட்டு நான் சென்று தடுத்தபோது கிரயம் வாங்கிவிட்டோம் என்று கூறிவிட்டார்கள். 3,4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை விற்பனை செய்தார்களா என்றால் இல்லை. பிறகு எதற்காக அவர்களை தாவாவில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் 4ஆம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு 3,4 பிரதிவாதிகள் வாரிசுகள் என்பதாலும் கிரய ஆவணத்தில் 4ஆம் பிரதிவாதி சென்னையில் வீடு கட்டி வருகிறார் என்றும், அவருக்காக விற்பனை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளதாலும், வாரிசுகள் என்ற அடிப்படையில் 3,4 பிரதிவாதிகளை தாவாவில் சேர்த்துள்ளேன்.

**14**. மேற்படி தாவா சொத்தை விற்று 4ஆம் பிரதிவாதி வீடு கட்டி வருகிறார் என்ற சங்கதியை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எந்த தேதியில் ஆக்ரமிப்பு செய்தார்கள் என்றால் 2018ஆம் ஆண்டு ஆக்ரமிப்பு செய்தார்கள். 1,2 பிரதிவாதிகள் மீண்டும் தாவா சொத்துக்களில் வேலி மரங்களை வெட்டினார்களா என்றால் வெட்டி எடுத்துச் சென்றார்கள். **சாட்சி மீண்டும் தாவா சொத்துக்களில் உள்ள வேலி மரங்களை யார் வெட்டி எடுத்துச் சென்றார்கள் என்று தெரியாது என்று கூறினார்**.

**15**. தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதாக கூறியுள்ள பட்சத்தில், அதற்கு வரி ரசீதுகள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் எந்த மாதிரியான ஆவணம் என்று எனக்கு தெரியாது. எனது சகோதர, சகோதரிகளை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

**3,4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது.**

**Ending time : 05.32 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.